## சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத்துறை – பத்திரிகையாளர் நலன் – தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியினை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிருவாகம்–4)த் துறை

அரசாணை (ப) எண்.182

நாள்: 18.12.2024
திருவள்ளுவராண்டு 2055
குரோதி வருடம்
மார்கழி 3 –ஆம் நாள்
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.66, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 20.03.1997.
2. அரசாணை (நிலை) எண்.85, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 28.04.1999.
3. அரசாணை (நிலை) எண்.78, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 11.04.2000.
4. அரசாணை (நிலை) எண்.144, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 28.09.2001.
5. அரசாணை (நிலை) எண்.246, செய்தி மற்றும் சுற்றுலா (நிருவாகம் 4.)த் துறை, நாள் 16.10.2006.
6. அரசாணை (நிலை) எண்.121, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிருவாகம் 4)த் துறை, நாள் 30.07.2018.
7. அரசாணை (ப) எண்.116, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிருவாகம் 4)த் துறை, நாள் 10.11.2021.
8. சென்னை பத்திரிகையாளர் மன்றத்தினரின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதம் நாள். 17.12.2024.

-----

**ஆணை:**

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர் நலன் கருதி, பத்திரிகைகளில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் பிழைத்திருத்துபவர்கள் ஆகியோர் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, குடும்ப உதவி நிதியாக பார்வை

...2

ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, முறையே ரூ.25,000/-, ரூ.40,000/-, ரூ.50,000/-, ரூ.2,00,000/- என வழங்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து வரும் நிலையில் இறந்து விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.2,00,000/- என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால், ரூ.1,50,000/- என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால், ரூ.1,00,000/- என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால், ரூ.50,000/- என்றும் குடும்ப உதவி நிதி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து வரும் நிலையில் இறந்து விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.3,00,000/- என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ2,25,000/- என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ.1,50,000/- என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருப்பார்களேயானால் ரூ.75,000/- என்றும் குடும்ப உதவி நிதி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, இறந்து விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.5,00,000/- என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இறந்து விடுவார்களேயானால் ரூ3,75,000/- என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இறந்து விடுவார்களேயானால் ரூ.2,50,000/- என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து இறந்து விடுவார்களேயானால் ரூ.1,25,000/- என்றும் குடும்ப உதவி நிதி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

5. இந்நிலையில், மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக சென்னை பத்திரிகையாளர் மன்றத்தினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றாக பத்திரிகையாளர்கள் மரணமடைந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதியினை ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்த வேண்டும் என கோரியிருந்தனர்.

6. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின்னர், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியானது, பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி, பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியினை உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

...3

7. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தில் உதவி பெற உரிய சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினைப் பெற்று இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

8. பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழுவே இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான விண்ணப்பங்களையும் பரிசீலிக்கும். அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்படும்.

9. இத்திட்டத்திற்கான செலவினங்கள் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில்" இருந்து வழங்கப்படும்.

10. இக்குடும்ப உதவி நிதி திட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அமல்படுத்தப்படும்.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.714/JS (PAP)/CMPRF/24 நாள். 18.12.2024-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே. ராஜாராமன்,
அரசுச் செயலாளர்